அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 05/2008 (I)

எனது இலக்கம் : AR/CCG/01

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2018.01.24

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள்
மாகாண சபை பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள் மற்றும்
அரசாங்க கூட்டுத்தாபனத் தலைவர்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனத் தலைவர்கள்

## குடிமகன் / சேவைப்பெறுநர் சத்தியப் பிரமாணத்தினை அறிமுகப்படுத்துதல்

அரச நிறுவனங்களின் மூலம் பொது மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் மிக்கதாக பெற்றுக் கொடுப்பதற்கு அவசியப்படும் பின்னணியினை உருவாக்குவதற்காக " குடிமகன் / சேவைப்பெறுநர் சத்தியப் பிரமாணத்தினை அறிமுகப்படுத்துதல்" என்றும் தலைப்பில் 2008.02.06 ஆந் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட இலக்கம் 05/2008 இனைக் கொண்ட சுற்றறிக்கையின் மீது தங்களது அவதானத்திற்கு கொண்டு வருகின்றேன்.

02. காலத்துடன் விருத்தியடையும் அரசாங்கப் பிரிவின் செயற்பாடுகளை மேலும் வினைத்திறன் மிக்கதாக மற்றும் அவற்றுடன் தொடர்புடைய தரப்பினர்களுக்கிடையில் சிறந்த தெளிவு மற்றும் ஒவ்வொருவருக்கிடையிலும் நம்பிக்கை தன்மையினை விருத்தி செய்வதற்கு "குடிமகன் / சேவைப்பெறுநர் சத்தியப் பிரமாணத்தினை அறிமுகப்படுத்துதல்" எனும் தலைப்பில் பிரசுரிக்கப்பட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளில் தேவைப்படும் திருத்தங்களுடன் செயற்படுத்துவது மிகவும் உதவியாக அமைகின்றது.

03. எனவே 05/2008 இனைக் கொண்ட சுற்றறிக்கையின் மீது தங்களது தனிப்பட்ட அவதானத்தினைச் செலுத்தி அவ் அறிவுரைகளுக்கு தங்களது நிறுவனத்தினுள் மற்றும் தமக்குக் கீழ் நிர்வாகிக்கப்படும் ஏனைய நிறுவனங்களிலும் மிகவும் பயனுள்ள வகையில் செயற்படுத்துமாறு இதன்மூலம் தயவுடன் அறியத்தருகின்றேன்.

இலங்கைப் பாராளுமன்றத்தில் அரச கணக்குகள் தொடர்பான செயற்குழுவின் கண்காணிப்பின் கீழ் காணப்படும் நிறுவனங்களின் செயலாற்றுகை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் போது இதன் தேவைப்பாடு உணரப்பட்டுள்ளது. அரச கணக்குகள் தொடர்பாக செயற்குழுவினால் எதிர்காலங்களில் மேற்கொள்ளப்படவிருக்கும் அரச நிறுவனங்களின்

மதிப்பீட்டிற்காக  பயன்படுத்தப்படும் தேர்வளவினை விரிவுபடுத்தும் போது அரச சேவையின் தரத்தினை மேலோங்கச் செய்வதற்கு குடிமகன் / சேவைப் பெறுநர் சத்தியப் பிரமாணத்தினை செயற்படுத்துவதன் பால் விசேட அவதானமொன்று செலுத்தப்படவுள்ளது.

ஒப்பம்/ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு

பிரதிகள் –

01. சனாதிபதிச் செயலாளர்
02. பிரதம மந்திரி செயலாளர்
03. அமைச்சரவை செயலாளர்
04. கணக்காய்வாளர்